பொலவபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின்
நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.ஆர்.மணிகண்டமூர்த்தி,

*****

ந.க.எண்.01/2023-2024/பொ.ஊ, நாள் : 12.07.2023

பொருள் : மனை பிரிவு - நம்பியூர் வட்டாரம் - பொலவபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் நி.அ.எண்.149/1B -ல் 2.28-1/2 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - சார்பாக.

பார்வை : 1) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.2017.

2) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் ந.க.எண்.4600/2022/ ஈ.மா-2, நாள்:19.05.2022.

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், பொலவபாளையம் ஊராட்சி, பொலவபாளையம் கிராமம் நி.அ.எண்.149/1B-ல் அமையும் 2.28-1/2 ஏக்கர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/ஈ.மா.எண்.161/2022 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் கடிதம் மூலம் மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் குறித்து மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) அவர்களால் தெளிவுரை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலவபாளையம் ஊராட்சி பொலவபாளையம் கிராமம் நி.அ.எண்.149/1B-க்கான Market Value பத்திரப் பதிவு துறையால் Online மூலம் வெளியிடப்பட்டுள்ள பதிவுகளின் படி சதுரடி ஒன்றுக்கு ரூ.6 உள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 2.28-1/2 ஏக்கருக்கு உரிய 3% Market Value கட்டணத்தை உரிய கணக்கு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் T.கிருபாகரன் த/பெ தங்கவேல் அவர்கள் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான 3% Market Value கட்டணம் ரூ.12,500/-ஐ கோபி State Bank of India வங்கியில் செலுத்தி அசல் சலானை ஒப்படைத்துள்ளார். மற்றும் பரிசீலனை கட்டணம் ரூ.1000/- மனுதாரர்களால் பொலவபாளையம் ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் தான பத்திர எண்:1265/2022 நாள்: 17-03-2022ன் படி பத்திரபதிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின்வாரியத்திற்கு உரிய இடத்தை தான பத்திர எண்: 1264/2022 நாள்: 17-03-2022ன் படி பத்திரபதிவு செய்து மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே ஈரோடு நகர் ஊரமைப்புத்துறை இயக்குநரால் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொலவபாளையம் ஊராட்சி, பொலவபாளையம் கிராமம் நி.அ.எண்.149/1B-ல் அமையும் 2.28-1/2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 01 மாதிரி மனை பிரிவின் மனை எண் 1 முதல் 39 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கி மனைப்பிரிவு வரைபடம் அங்கீகாரம் செய்து உத்தரவிடப்படுகிறது.

தலைவர்,
பொலவபாளையம் ஊராட்சி.

பெறுதல் : திரு.த.கிருபாகரன்,
த/பெ. தங்கவேல்,
83/1- கோபிமெயின்ரோடு,
கொன்னமடை, நம்பியூர்,
நம்பியூர் - 638 458.
ஈரோடு மாவட்டம்.

இணைப்பு:

மனைப்பிரிவு உத்திரவு நிபந்தனைகள் மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்.

பொலவபாளையம் ஊராட்சி,

ந.க.எண்.01/2023-2024/பொ.ஊ, நாள் : 12.07.2023.

தொழில்நுட்ப இறுதி ஒப்புதல்

மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குர்(பொ) அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிய மனைப்பிரிவிற்கு ம.வ/ஈ.மா எண்.161/2022 என எண்ணிடப்பட்டு பொலவபாளையம் ஊராட்சி, பொலவபாளையம் கிராமம் நி.அ.எண்.149/1B-ல் அமையும் 2.28-1/2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இடத்திற்கு 3% Market Value செலுத்தப்பட்டுள்ளதால் மனை மாவட்டாட்சியர் என அமையப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

தலைவர்,
பொலவபாளையம் ஊராட்சி.